## 59. உம்மோடு பேசிட வாஞ்சிக்கிறேன்

### பல்லவி

உம்மோடு பேசிட வாஞ்சிக்கிறேன்
உம்மோடு இணைந்திட ஏங்குகிறேன்
உம் அன்பைப்போல் வேறு அன்பில்லையே
உம் பாசத்திற்கு நிகர் இல்லையே

### சரணங்கள்

1. ஜெப ஆவி என்மேல ஊற்றுமையா
இரவெல்லாம் கண் விழித்து ஜெபித்திடவே
பூமியில் உம்மைபோல வாழ்ந்திடவே
உமது நாமத்தை உயர்த்திடவே
- உம்மோடு பேசிட

2. இரவும் பகலும் உம் வார்த்தையிலே
தியானம் செய்து மகிழனுமே
வேதத்தின் ரகசியம் அறிந்திடவே
ஆராய்ந்து அதிசயம் காணணுமே
- உம்மோடு பேசிட

3. உம்மை அறிகின்ற அறிவுக்காக
எல்லாவற்றையும் நஷ்டம் எண்ணினேன்
கிறிஸ்துவை ஆதாயப்படுத்தி கொள்ள
எல்லாவற்றையும் குப்பை எண்ணினேன்
- உம்மோடு பேசிட